**TAMIL NADU POLICE**
INTEGRATED INVESTIGATION FORM-I

# FIRST INFORMATION REPORT
## முதல் தகவல் அறிக்கை
(Under Section 154 Cr.P.C.)
(கு.ந.வி.தொ.பிரிவு 154 இன் கீழ்)

C 8110211

1. District : மாவட்டம் தஞ்சாவூர் PS: காவல்நிலையம் V & AC Year: ஆண்டு 2020 FIR No.: மு.த.அ. எண் 04/2020 Date: நாள் 13.10.2020

2. (i) Act சட்டம்: Cr.PC, PC Act (Amendment 2018) Sections பிரிவுகள்: 102 Cr.P.C r/w 7 of PC
(ii) Act சட்டம்: Sections பிரிவுகள்: Amendment Act 2018 and
(iii) Act சட்டம்: Sections பிரிவுகள்: U/s 7A and 12 of PC (Amendment) Act 2018.
(iv) Other Acts & Sections பிற சட்டங்களும், பிரிவுகளும் :

3. (a) Occurrence of Offence Day : குற்ற நிகழ்வு நாள் 12.10.2020 Date from : நாள் முதல் - Date to : நாள் வரை -
Time Period : நேர அளவு Time from : நேரம் முதல் 18.00 hrs Time to : நேரம் வரை 23.30 hrs
(b) Information Received at PS. Date : காவல் நிலையத்திற்கு தகவல் கிடைத்த நாள் 13.10.2020 Time : நேரம் 05.30 hrs
(c) General Diary Reference : Entry No(s) பொது நாட்குறிப்பில் பதிவு விவரம் எண் Time : நேரம் 05.30 hrs

4. Type of Information : Written/ Oral : தகவலின் வகை : எழுத்து மூலம் / வாய் மொழியாக [illegible] மூலமாக

5. Place of Occurrence (a) Direction and Distance from PS: குற்ற நிகழ்விடம் (அ) காவல்நிலையத்திலிருந்து எவ்வளவு தூரமும், எத்திசையும் ஜாயிண்ட். 1 இணை சார் பதிவாளர்
Beat Number : முறைக் காவல் எண் (b) Address : முகவரி Jt.1 SR office அலுவலகம், கும்பகோணம், தஞ்சாவூர் மாவட்டம் கிழக்கு (கும்பகோணம்) 55 km வடகிழக்கு.
(c) In case outside limit of this Police Station, then the Name of P.S : District : இக்காவல் நிலைய எல்லைக்கப்பால் நடந்து இருக்குமாயின், அந்நிலையில் அந்த கா.நி.பெயர் மாவட்டம்

6. Complainant /Informant (a) Name : குற்றமுறையீட்டாளர்/ தகவல் தந்தவர் பெயர் K. ரவிச்சந்திரன் (b) Father's/ Husband's Name : தந்தை / கணவர் பெயர் V. கிருஷ்ணமூர்த்தி
(c) Date / Year of Birth : நாள் / பிறந்த ஆண்டு 1966 (d) Nationality : நாட்டினம் இந்தியன் (e) Passport No. : வெளிநாட்டு கடவுச்சீட்டு எண்
Date of Issue : வழங்கப்பட்ட நாள் Place of Issue : வழங்கப்பட்ட இடம்
(f) Occupation : தொழில் Dy. Inspection Cell Officer (Tahsildar) (g) Address : முகவரி District Collectorate, Thanjavur.

7. Details of Known/Suspected/Unknown accused with full particulars. (Attach separate sheet if necessary) தெரிந்த / ஐயப்பாட்டிற்குறிய / தெரியாத குற்றஞ்சாட்டப்பட்டவரின் முழுமையான விவரங்கள் (தேவையெனில் தனித்தாள் இணைக்கவும்) 1. Tr. R. Asaithambi S/o. Rajappa, Joint. No.1 SubReg, Kumbakonam, Thanjavur Dt. 2. K. Vinayagamoorthy S/o. Kuppusamy Jr. Asst. 3. B. Dinesh Kumar S/o. Balakrishnan Computer Operator TCS Staff. 4. Manikandan S/o. Shanmugasundaram DEO Operator, TCS Staff & 5. M. Murugan S/o. Manickam, OA, O/o Jt. No.1 SR office, Kumbakonam, Thanjavur Dt.

8. Reasons for delay in reporting by the complainant / Informant: குற்றமுறையீட்டாளரால் / தகவல் கொடுப்பவரால் முறையிட்டதில் தகவல் கொடுப்பதில் தாமதம்
- தாமதமில்லை -

* GCP-240-34(Type-2) 90,000 Cps -21.3.16(HCL-12)

9. Particulars of properties stolen / involved (Attach separate sheet if necessary)
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் விவரம் (தேவையெனில் தனித் தாளில் இணைக்கவும்)

—

10. Total value of properties stolen / involved :
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் மொத்த மதிப்பு —

11. Inquest Report / Un-natural death Case No. if any:
பிண விசாரணை அறிக்கை / இயற்கைக்கு மாறான இறப்பு எண் ஏதேனும் இருந்தால் —

12. FIR Contents (Attach separate sheet, if required) :
முதல் தகவல் அறிக்கையின் சுருக்கம். (தேவையெனில் தனித்தாளில் இணைக்கவும்)

பணிந்து அனுப்பப்பட்டது:

இன்று 13.10.2020ம் தேதி அதிகாலை 04.30 மணிக்கு, தஞ்சாவூர் ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு காவல் ஆய்வாளராகிய நான், நிலைய பொறுப்பில் இருந்தபொழுது தஞ்சாவூர் மாவட்ட துணை ஆய்வுக்குழு அலுவலர் திரு.K.கஜேந்திரன் அவர்கள் கொடுத்த புகாரை பெற்று வழக்கு பதிவு செய்த விபரம் பின்வருமாறு :- 12.10.2020 ஆம் தேதி திங்கட்கிழமை மாலை கும்பகோணம் நம்பர் 1 இணை சார் பதிவாளர் அலுவலகத்தில் பத்திரப்பதிவு செய்வதற்கு சார் பதிவாளரும், சார்பதிவாளர் அலுவலக ஊழியர்களும் கையூட்டு பெறுவதாக, தஞ்சாவூர் மாவட்ட துணை ஆய்வுக்குழு அலுவலரான K.கஜேந்திரன் (வட்டாட்சியர்) என்பவருக்கு கிடைத்த தகவலின் பேரில், தஞ்சாவூர் ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு அலுவலகத்திற்கு 15.00 மணிக்கு சென்று தஞ்சாவூர் ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு காவல் ஆய்வாளர் திருமதி.P.பத்மாவதி என்பவரிடம் தகவல் தெரிவித்தும், அதன்பின்னர் (12.10.2020) மாலை 15.45 மணிக்கு தஞ்சாவூர் ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு அலுவலகத்திலிருந்து

PTO 3

13. Action taken : Since the above report reveals commission of offence(s) u/s as mentioned at item No.2 registered the case and took up the investigation / directed Tr. R. Venkatraman Rank Insp. of to take up the Investigation / Refused Investigation / transferred to PS V&AC Thanjavur on point of jurisdiction.

எடுக்கப்பட்ட நடவடிக்கை : மேலே குற்ற முறையீட்டில் உள்ளவை பிரிவு 2ல் கூறப்பட்ட சட்ட பிரிவுப்படியான குற்றமாக வழக்கு பதிவு செய்து புலனாய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது / பணிக்கப்படுதல் ............................. பதவி ...................... நிலை பணியாளரின் புலனாய்வுக்கு எடுத்துகொள்ள பணிக்கப்பட்டது / மறுக்கப்பட்டு எல்லையைக் கருதி புலனாய்வுக்கு ............................................ காவல் நிலையத்திற்கு மாற்றப்படுகிறது.

FIR read over to the Complainant / Informant, admitted to be correctly recorded and a copy given to the Complainant / Informant free of cost.
மு.த.அ. குற்றமுறையீட்டாளருக்கு / தகவல் தந்தவருக்கு படித்துக்காட்டி, அது சரியாக எழுதப்பட்டு இருப்பதாக ஏற்றுக் கொள்ளப்பட்டு, அதன் படி நகல் ஒன்று இலவசமாக கொடுக்கப்பட்டது.

13/10/2020

14. Signature / Thumb Impression of the Complainant / Informant
குற்றமுறையீட்டாளர் / தகவல் கொடுப்பவரின் ஒப்பம் /
பெருவிரல் இரேகைப் பதிவு

13/10/2020 Insp

Signature of the Officer in-charge, Police Station
காவல் நிலைய பொறுப்பு அலுவலரின் ஒப்பம்

15. Date & Time of despatch to the court:
நீதிமன்றத்திற்கு அனுப்பப்பட்ட நாளும், நேரமும்
13.10.2020 / 0800 hrs.

Name: பெயர் P. PADMAVATHI
Rank: நிலை Inspector of Police No. எண்
V&AC, Thanjavur.

GCP-240-34(Type-2) 90,000 Cps.-21.3.16(HCL-12)p.2

இரண்டு அரசு வாகனத்தில் புறப்பட்டு, 17.45 மணிக்கு கும்பகோணம் வந்தும் கும்பகோணம் நால் ரோட்டில் இருந்து Dr.மூர்த்தி ரோட்டில் பாலக்கரை செல்லும் வழியில் ரோட்டிற்கு வடக்கு பக்கம் தெற்கு பார்த்த வாசல் உடைய இரண்டு மாடிக்கட்டிடமான மாவட்ட பதிவாளர் அலுவலகத்தில் தரைத்தளத்தில் உள்ள கும்பகோணம் நம்பர்.1 இணை சார் பதிவாளர் அலுவலகத்திற்கு திரு.K.கஜேந்திரன் மற்றும் தஞ்சாவூர் ஊழல்தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு காவல் ஆய்வாளர் திருமதி.P.பத்மாவதி, மற்றும் தஞ்சாவூர் ஊழல்தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு அலுவலர்களுடன் சென்று, அங்கு பணியில் இருந்த நம்பர்-1 இணை சார் பதிவாளர் திரு.R.ஆசைத்தம்பி அவர்களிடமும் மற்றும் மேற்படி அலுவலகத்தில் பணி செய்து கொண்டிருந்த அலுவலர்களிடமும் திடீர் சோதனை பற்றிய தகவல் தெரிவித்து, மேற்படி திடீர் சோதனையை மாலை 18.00 மணிக்கு மேற்கொண்டபோது தயார் செய்யப்பட்ட நடவடிக்கை மற்றும் மகசர் விபரம் கீழ்கண்டவாறு.

**இந்த திடீர் சோதனையின்போது மாவட்ட ஆய்வுக் குழுவினர் மற்றும் ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு குழுவில் இருந்த அலுவலர்கள் விபரம்.**

1) திரு.K.கஜேந்திரன், மாவட்ட துணை ஆய்வுக்குழு அலுவலர், தஞ்சாவூர் மாவட்டம்.
2) திரு.P.பத்மாவதி, காவல் ஆய்வாளர், ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு, தஞ்சாவூர்.

**இந்த திடீர் சோதனையின்போது கும்பகோணம் நம்பர்.1 இணை சார் பதிவாளர் அலுவலக அலுவலர்களிடம் சோதணையிட்ட விபரம் பின்வருமாறு.**

(1) கும்பகோணம் நம்பர்.1 இணை சார் பதிவாளர் திரு.R.ஆசைத்தம்பி அவர்களை விசாரித்தபோது அவர் தான் இன்று வீட்டில் இருந்து பணம் எதுவும் எடுத்து வரவில்லை என்றும் அதனால் தனி நபர் பணப்பதிவேட்டில் பதிவு எதுவும் செய்யவில்லை என்றும் தெரிவித்தார்.

(2) சார் பதிவாளர் இருக்கையின் வலதுபுறம் அமர்ந்திருந்த அலுவலக உதவியாளர் திரு.M.முருகாணந்தம் என்பவரை விசாரித்தபோது, அவர் தனி நபர் பணப்பதிவேட்டில் இன்று வீட்டில் இருந்து எடுத்து வந்ததாக ரூ.320/- பதிவு செய்துள்ளதாக தெரிவித்தார். அந்த பணத்தை செலவு செய்துவிட்டதாகவும் தெரிவித்தார்.

(3) சார் பதிவாளர் இருக்கையின் எதிரே இருந்த கணிணி அறையில் தெற்கு பார்த்து கணினி முன்பாக அமர்ந்திருந்த TCS Staff (Data Entry Operator) திரு.S.மணிகண்டன் என்பவரை விசாரித்தபோது, அவர் தான் வீட்டில் கொண்டு

வந்த பணத்தை மதியம் சாப்பாடு வாங்கி சாப்பிட்டு விட்டதால் தற்போது தன்னிடம் பணம் எதுவும் இல்லை என்று தெரிவித்தார்.

(4) சார் பதிவாளர் இருக்கையின் எதிரே இருந்த கணிணி அறையில் TCS Staff திரு.S.மணிகண்டனுக்கு அருகில் மேற்கு பார்த்து கணினி முன்பாக அமர்ந்திருந்த இளநிலை உதவியாளர் திரு.K.விநாயகமூர்த்தி என்பவரை விசாரித்தபோது, அவர் தன்னிடம் பணம் எதுவும் இல்லை என்று தெரிவித்தார். மேலும் அவர் இன்று வீட்டில் இருந்து எடுத்து வந்ததாக தனி நபர் பணப்பதிவேட்டில் ரூ.250/- பதிவு செய்துள்ளதாகவும், அதனை மதிய சாப்பாடு மற்றும் இதர வகையில் செலவு செய்துவிட்டதாகவும் தெரிவித்தார்.

(5) சார் பதிவாளர் இருக்கையின் எதிரே இருந்த கணிணி அறையில் இளநிலை உதவியாளர் திரு.K.விநாயகமூர்த்திக்கு அருகில் மேற்கு பார்த்து கணினி முன்பாக அமர்ந்திருந்த TCS Staff (Camera Operator) திரு.B.தினேஷ்குமார் என்பவரை விசாரித்தபோது, அவர் தன்னிடம் பணம் எதுவும் இல்லை என்றும், வீட்டில் இருந்து எடுத்து வந்த பணத்தை சாப்பாட்டு செலவு செய்துவிட்டதால் தற்போது பணம் எதுவும் இல்லை என்றும் தெரிவித்தார்.

மேலும் கும்பகோணம் சார் பதிவாளர் திரு.R.ஆசைத்தம்பி அவர்களை விசாரித்தபோது அவர் தனது வலது கையில் சந்தேகத்திற்கு இடம் அளிக்கும் வகையில் வைத்திருந்த கருப்பு நிற Travel Bag பற்றி கேட்டபோது அவர் பதட்டத்துடன், SEASON என்று அச்சிடப்பட்டிருந்த மேற்படி அவரது வலது கையில் பிடித்து வைத்திருந்த கருப்பு நிறம் கொண்ட ரெக்சின் பேக்கில் 4 வது ஜிப்பில் பாலீதின் கவரில் தனித்தனியாக 4 துண்டு சீட்டுகளில் அவருக்காக கையூட்டு பணம் கொடுத்தவர்களின் பெயர்களை எழுதி ரப்பர் பேண்ட் போட்டு சுருட்டி வைத்திருந்த ரூ.13,800/- பணத்தை எடுத்து ஆஜர் செய்து, மேற்படி பணம் இன்று பத்திரம் பதிவு செய்தவர்களிடமும், ஆவண எழுத்தர்களிடமும் பெற்று வைத்திருந்த தனக்குரிய கையூட்டு பணம் என்று தெரிவித்தார். மேலும் இன்றைக்கு கையூட்டாக வசூல் செய்யப்பட்ட மொத்த தொகையில் செலவு போக மீதமுள்ள தொகையை வைத்திருந்ததாகவும் கூறினார். அவர் வைத்திருந்த மேற்படி வகையில் பெறப்பட்ட கையூட்டு பணத்தின் விவரம் கீழ்வருமாறு:

1) பச்சை நிற Conquered பேப்பர் துண்டு சீட்டில் சுஜாதா நாராயணன் என்று எழுதி தலைப்பிட்டு அதில் 1) RAMYA - 4012 - கிரயம் - 1000, 2) SANGEETHA - 4013 - கிரயம் - 1000, 3) SANGEETHA - 4014 - MOD - 500, 4) RAMYA - 4015 - MOD - 500 TOTAL 3000 என்று எழுதப்பட்டுள்ளது. அதற்கு

DENOMINATION

| Sl.No | Rs. | No's | Total Amount |
|---|---|---|---|
| 1 | 500 | 6 | 3,000.00 |

2) மேலும் வெள்ளை நிற பேப்பர் துண்டு சீட்டில் மணி என்று எழுதி தலைப்பிட்டு அதில் 1) Plot 1 - 1000, 2) செட்டில்மெண்ட் 2000 TOTAL 3000 என்று எழுதப்பட்டுள்ளது. அதற்கு

DENOMINATION

| Sl.No | Rs. | No's | Total Amount |
|---|---|---|---|
| 1 | 500 | 6 | 3,000.00 |

3) மேலும் வெள்ளை நிற பேப்பர் துண்டு சீட்டில் பாப்பா என்று எழுதி தலைப்பிட்டு அதில் 1) 5000, 1000,200 Total 6200 என்று எழுதப்பட்டுள்ளது. அதற்கு

DENOMINATION

| Sl.No. | Rs. | No's | Total Amount | Grand Total |
|---|---|---|---|---|
| 1 | 2000 | 1 | 2,000.00 | 6,200.00 |
| 2 | 500 | 8 | 4,000.00 | |
| 3 | 200 | 1 | 200.00 | |

4) மேலும் வெள்ளை நிற பேப்பர் துண்டு சீட்டில் Document என்று எழுதி தலைப்பிட்டு அதில் 1) ஐயா- 3000. 2) PG- 500, 3) கார்த்திக் - 3000, 4) திருவிடைமருதூர்- 1000, 5) Driver முருகானந்தம் - 500, 6) பாப்பா 7) சுஜாதா, 8) மணி என்ற இடத்தில் டிக் அடித்தும், 9) Balance 50, மொத்தம் 8050 என்று எழுதப்பட்டும், பார்ட்டியினரிடம் கையூட்டு தொகை வசூல் செய்தும், அதற்கு செலவு கணக்காக சாப்பாடு மற்றும் ஸ்நாக்ஸ் - ரூ.435, OA - ரூ.480 மொத்தம் ரூ.915 ஐ கழித்து ரூ.7135 மற்றும் இதர செலவுகளை கழித்து மீதம் ரூ.1600 என்று எழுதப்பட்டுள்ளது. அதற்கு

DENOMINATION

| Sl.No. | Rs. | No's | Total Amount | Grand Total |
|---|---|---|---|---|
| 1 | 500 | 3 | 1,500.00 | 1600.00 |
| 2 | 100 | 1 | 100.00 | |

மேற்படி கருப்பு நிறம் கொண்ட ரெக்சின் பேக்கில் 4 வது ஜிப்பில் தனித்தனியாக 4 துண்டு சீட்டில் 1) சுஜாதா நாராயணன் ரூ.3000/-. 2) மணி ரூ.3000/-, 3) பாப்பா ரூ.6200/-, 4) கணக்கு சீட்டு ரூ.1600/- எழுதி ரப்பர் பேண்ட் போட்டு சுருட்டி வைத்திருந்த ரூ.13,800/- பணத்தை பணம், பணம் வைத்திருந்த கருப்பு நிறம் கொண்ட ரெக்சின் பேக் மற்றும் மேற்படி 4 துண்டு சீட்டுகள் ஆகியவை மேல் நடவடிக்கைக்காக மகஜரில் கைப்பற்றப்பட்டது. மேற்படி நம்பர்.1 இணை சார் பதிவாளரிடம் அவர் வைத்திருந்த பணம் ரூ.13,800/- பற்றி விசாரித்தபோது அவர் ஆவண எழுத்தர்கள் இன்று தான் பத்திரம் பதிவு செய்ததற்காக அவருக்கு கொடுத்த கையூட்டு பணம் ரூ.13,800/- என்று கூறினார். அவரது வாக்குமூலம் துணை ஆய்வுக்குழு அலுவலர் அவர்களால் தனியாக பதிவு செய்யப்பட்டது.

மேலும் நம்பர்.1 இணை சார் பதிவாளர் திரு.R.ஆசைத்தம்பி அவர்கள் இருக்கைக்கு எதிர்புறம் உள்ள கணினி அறையில் மேற்கு பார்த்து அமர்ந்திருந்த இளநிலை உதவியாளர் திரு.K.விநாயகமூர்த்தி அவருக்கு அருகில் மேற்கு பார்த்து கணினி முன்பாக அமர்ந்திருந்த TCS Staff (Camera Operator) திரு.B.தினேஷ்குமார் மற்றும் தெற்கு பார்த்து அமர்ந்திருந்த TCS Staff (Data Entry Operator) திரு.S.மணிகண்டன் ஆகிய மூவரது மேஜைக்கு அடியில் கீழே சுருட்டி வீசப்பட்ட நிலையில் பணிரெண்டு 500 ரூபாய் நோட்டுகள், ஒரு 200 ரூபாய் நோட்டு, நான்கு 100 ரூபாய் நோட்டுக்கள், நான்கு 50 ரூபாய் நோட்டுக்கள், நான்கு 20 ரூபாய் நோட்டுக்கள், இரண்டு 10 ரூபாய் நோட்டுக்கள், அடங்கிய மொத்தம் ரூ.6900/- சுருட்டப்பட்ட நிலையில் கிடந்தது, அது பற்றி இளநிலை உதவியாளர் திரு.K.விநாயகமூர்த்தி, TCS Staff (Data Entry Operator) திரு.S.மணிகண்டன் மற்றும் TCS Staff (Camera Operator) திரு.B.தினேஷ்குமார் ஆகிய மூவரிடமும் விசாரிக்க, அவர்கள் ஆவண எழுத்தர்களும், பார்ட்டியினரும் இன்று அவர்களுக்காக கொடுத்த கையூட்டு பணத்தை Raid பயத்தில் மேஜைக்கு கீழே வீசிவிட்டதாக கூறினார்கள். எனவே மேற்படி பணம் மேல் நடவடிக்கைக்காக மகஜரில் கைப்பற்றப்பட்டது.

மேலும் நம்பர்.1 இணை சார் பதிவாளர் திரு.R.ஆசைத்தம்பி அவர்கள் இருக்கைக்கு மேற்புறம் உள்ள சிறிய பதிவுரு வைப்பறையில் மேஜைக்கு கீழே ஒரு 500 ரூபாய் நோட்டு, மூன்று 200 ரூபாய் நோட்டுக்கள், பணிரெண்டு 100 ரூபாய் நோட்டுக்கள், ஆறு 50 ரூபாய் நோட்டுக்கள், எட்டு 10 ரூபாய் நோட்டுக்கள், அடங்கிய ரூ.2680/- சுருட்டப்பட்ட நிலையில் கிடந்தது, அது பற்றி சார் பதிவாளர் அலுவலகத்தில் மேற்படி பதிவுறு வைப்பறையில் பணியில் இருந்த அலுவலக உதவியாளர் முருகானந்தம் அவர்களிடம் விசாரிக்க, அவர்

தனக்கு இன்று பத்திரம் பதிவு செய்ய வந்தவர்களும், ஆவண எழுத்தர்களும் கொடுத்த கையூட்டு பணத்தை ரெய்டு வந்தவுடன் பயத்தில் தூக்கி எறிந்துவிட்டதாக கூறினார். எனவே அந்த பணம் மேல் நடவடிக்கைக்காக மகஜரில் கைப்பற்றப்பட்டது.

மேலும் நம்பர்.1 இணை சார் பதிவாளர் திரு.R.ஆசைத்தம்பி அவர்களிடம் இன்றைய பதிவு விவரங்கள் பற்றி விசாரிக்க இன்று மொத்தம் 7 கிரய ஆவணங்களும், 9 MOD ஆவணங்களும், 2 செட்டில்மெண்ட் ஆவணங்களும், 2 ரத்து ஆவணமும், 2 உயில் ஆவணம், 2 வரவு ரசீது, 3 பொது அதிகார ஆவணம் ஆகியவை பதிவு செய்யப் பட்டுள்ளதாகவும், 2-Adjudication அதன்படி மேற்படி 28 ஆவணங்களுக்கும் ரூ.3,42,483/- E-Payment மூலம் பதிவு கட்டணம் செலுத்தப்பட்டுள்ளது என்றும், இன்று கொடுக்கப்பட்ட 10 வில்லங்கச் சான்றுகளுக்கும், 18 சான்றிட்ட நகல்களுக்கும் "D" கணக்குப்படி ரூ.6,920/- ம், இன்று நடைபெற்ற 1 இந்து திருமண பதிவிற்கு ரூ.235/-ம், பிரிவு 41ன் படி 18 ஆவணங்களுக்கு செலுத்தப்பட்ட குறைவு முத்திரைத் தீர்வை ரூ.3,30,906/- ம், CD கட்டணமாக ரூ.2700/-ம், உட்பிரிவு கட்டணம் ரூ.4800/- ம் E-Payment மூலம் பணம் செலுத்தப்பட்டுள்ளது. இது தவிர பணம் எதுவும் பதிவிற்காக ரொக்கமாக வசூலிக்கப்படவில்லை என்றும் தெரிவித்தார்.

இந்த திடீர் சோதனை நடவடிக்கையின் தொடர்ச்சியாக மேற்கண்டவாறு நம்பர்.1 இணை சார் பதிவாளர் திரு.R.ஆசைத்தம்பி என்பவர் கருப்பு நிறம் கொன்ட ரெக்சின் பேக்கில் 4 வது ஜிப்பில் தனித்தனியாக 4 துண்டு சீட்டில் 1) சுஜாதா நாராயணன் ரூ.3000/-. 2) மணி ரூ.3000/-, 3) பாப்பா ரூ.6200/-, 4) கணக்கு சீட்டு ரூ.1600/- எழுதி ரப்பர் பேண்ட் போட்டு சுருட்டி வைத்திருந்த ரூ.13,800/- 2) இளநிலை உதவியாளர் திரு.K.விநாயகமூர்த்தி, கணினி முன்பாக அமர்ந்திருந்த TCS Staff (Camera Operator) திரு.B.தினேஷ்குமார் மற்றும் TCS Staff (Data Entry Operator) திரு.S.மணிகண்டன் ஆகிய மூவரது மேஜைக்கு அடியில் கீழே சுருட்டி வீசப்பட்ட நிலையில் கிடந்த ரூ.6900/- மற்றும் 3) நம்பர்.1 இணை சார் பதிவாளர் அலுவலகத்தில் உள்ள சிறிய பதிவுரு வைப்பறையில் மேஜைக்கு கீழே சுருட்டப்பட்ட நிலையில் கிடந்த ரூ.2680/- ஆக மொத்தம் **ரூ.23,380/-** யையும் மேற்படி கும்பகோணம் நம்பர்.1 இணை சார் பதிவாளர் திரு.R.ஆசைத்தம்பி மற்றும் நம்பர்-1 இணை சார் பதிவாளர் அலுவலக அலுவலர்கள் (1) திரு.K.விநாயகமூர்த்தி, இளநிலை உதவியாளர், (2) திரு.M.முருகானந்தம், அலுவலக உதவியாளர் (3) TCS Staff (Camera Operator) திரு.B.தினேஷ்குமார் மற்றும் (4) TCS Staff (Data Entry Operator) திரு.S.மணிகண்டன் ஆகியோர் குற்றமுறு நடவடிக்கையின்

மூலம் பத்திர பதிவிற்கு வந்தவர்களிடமும், ஆவண எழுத்தர்களிடமும் கையூட்டாக கேட்டு பெற்ற பணம் என்ற சந்தேகத்தின் அடிப்படையில் நடவடிக்கை மற்றும் மகஜரில் கைப்பற்றப்பட்டது. மேலும் கும்பகோணம் மாவட்ட பதிவாளர் அலுவலக பணியாளர்கள் வருகை பதிவேடு-2020 -1 மற்றும் கும்பகோணம் மாவட்ட பதிவாளர் அலுவலக தனி நபர் பணப் பதிவேடு 2020 - 1 ஆகியவை நடவடிக்கை மற்றும் மகஜரில் கைப்பற்றப்பட்டது. மேலும் இன்று பதிவு செய்யப்பட்ட 7 கிரய ஆவணங்களும், 9 MOD ஆவணங்களும், 2 செட்டில்மெண்ட் ஆவணங்களும், 2 ரத்து ஆவணமும், 2 உயில் ஆவணம், 2 வரவு ரசீது, 3 பொது அதிகார ஆவணம், 2-Adjudication மொத்தம் 28 ஆவணங்கள், 10 வில்லங்கச் சான்றுகள், 18 சான்றிட்ட நகல்கள் "D" கணக்கு, இந்து திருமண பதிவு, பிரிவு 41ன் படி 18 ஆவணங்கள், CD கட்டணம், உட்பிரிவு கட்டணம் ஆகியவற்றின் விவரம் குறித்து கம்ப்யூட்டர் பிரிண்ட் எடுத்து நம்பர்-1 இணை சார் பதிவாளர் சான்றொப்பமிட்டு மகஜரில் கைப்பற்றப்பட்டது. இந்த திடீர் சோதனை நடவடிக்கைகள் மற்றும் மகஜர் **12.10.2020** ந் தேதி **23.30** மணிக்கு முடிக்கப்பட்டது.

எனவே மேற்படி கும்பகோணம் நம்பர்.1 இணை சார் பதிவாளர் திரு.R.ஆசைத்தம்பி பத்திரம் பதிவு செய்ய வந்தவர்களிடமும், ஆவண எழுத்தர்களிடமும், குற்றமுறு நடவடிக்கை மூலம் பெற்று வைத்திருந்த பணம் ரூ.13,800/-, 2) கணினி அறையில் அமர்ந்திருந்த இளநிலை உதவியாளர் திரு.K.விநாயகமூர்த்தி, TCS Staff (Camera Operator) திரு.B.தினேஷ்குமார் மற்றும் TCS Staff (Data Entry Operator) திரு.S.மணிகண்டன் ஆகிய மூவரது மேஜைக்கு அடியில் கீழே சுருட்டி வீசப்பட்ட நிலையில் கிடந்த ரூ.6900/- மற்றும் 3) நம்பர்.1 இணை சார் பதிவாளர் அலுவலகத்தில் உள்ள சிறிய பதிவுரு வைப்பறையில் OA முருகானந்தம் என்பவரால் சுருட்டி மேஜைக்கு கீழே வீசப்பட்டு சுருட்டப்பட்ட நிலையில் கிடந்த ரூ.2680/- ஆகக் கூடுதல் **ரூ.23,380/-** யையும் மேற்படி கும்பகோணம் நம்பர்.1 இணை சார் பதிவாளர் திரு.R.ஆசைத்தம்பி மற்றும் நம்பர்-1 இணை சார் பதிவாளர் அலுவலக அலுவலர்கள் (1) திரு.K.விநாயகமூர்த்தி, இளநிலை உதவியாளர், (2) திரு.M.முருகானந்தம், அலுவலக உதவியாளர் (3) TCS Staff (Camera Operator) திரு.B.தினேஷ்குமார் மற்றும் (4) TCS Staff (Data Entry Operator) திரு.S.மணிகண்டன் ஆகியோர் குற்றமுறு நடவடிக்கையின் மூலம் பத்திரம் பதிவிற்கு வந்தவர்களிடமும், பத்திர எழுத்தர்களிடமும் கையூட்டாக கேட்டு பெற்ற பணம் என்ற சந்தேகத்தின் அடிப்படையிலும், அரசு கணக்கில் காட்டப்படாத பணமாக இருப்பதாலும் மேற்படி கும்பகோணம் நம்பர்.1 இணை சார் பதிவாளர் திரு.R.ஆசைத்தம்பி மற்றும் நம்பர்-1 இணை சார் பதிவாளர் அலுவலக அலுவலர்கள் (1) திரு.K.விநாயகமூர்த்தி, இளநிலை உதவியாளர், (2)

திரு.M.முருகானந்தம், அலுவலக உதவியாளர் (3) TCS Staff (Camera Operator) திரு.B.தினேஷ்குமார் மற்றும் (4) TCS Staff (Data Entry Operator) திரு.S.மணிகண்டன் ஆகியோர் மீது சட்டப்படி நடவடிக்கை எடுக்க கேட்டுக்கொள்ளப்பட்டிருந்தது.
Sd.K.Kajendiran.12.10.2020.

Sir,

The above mentioned report with seized money in the proceedings cum Mahazar has been received from the Deputy ICO, Thanjavur on 13.10.2020 at 04.30 hrs. and registered as a case in Thanjavur V&AC Crime No.04/2020 U/s.102 Cr.PC and 7 of Prevention of Corruption Act 1988 as Amendment of Prevention of Corruption (Amendment) Act 2018 and 7-A and 12 of Prevention of Corruption (Amendment) Act 2018 by me on 13.10.2020 at 05.30 hrs -Sd- P.Padmavathy, Inspector (V&Ac), Thanjavur.13.10.2020.

முதல் தகவல் அறிக்கையின் அசலையும் திடீர் ஆய்வு நடவடிக்கைகள் மற்றும் மகசர், R.ஆசைத்தம்பியின் வாக்குமூலம் ஆகியவற்றையும் கும்பகோணம் தலைமை குற்றவியல் நீதித்துறை நடுவர் மற்றும் தனி நீதிபதி அவர்களுக்கு அனுப்பிவைக்கப்பட்டது. நகல்கள் சம்மந்தப்பட்ட அதிகாரிகளுக்கு அனுப்பியும், நகல் ஒன்றை நிலைய கோப்பிலும் வைக்கப்பட்டது.

P. Padmavathi Insp
13/10/2020
(P. PADMAVATHI)
Inspector of Police,
Vigilance and Anti-Corruption,
Thanjavur.